මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

**மக்கள் வங்கியினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.**

| கேள்விப்பத்திர இலக்கம் | பொருள் பற்றிய விபரம் | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி | விண்ணப்பம் வழங்கப்படும் இறுதி திகதி | கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|
| P/064/2025 | வெளி கம்பனியொன்றின் ஊடாக சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் | மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% | 2025.05.19ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2025.05.20ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2025.04.28ஆம் திகதி முதல் 2025.05.19ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், கேள்விப்பத்திரத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகத் தமது நிறுவனத்தின் விண்ணப்ப கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம், இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் 2025.05.20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியன்று பி.ப. 2.00 மணியின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

3. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை வழங்குவது மாத்திரம் கேள்விப்பத்திரத்திற்கான தகைமையைப் பெறுவதற்குப் போதுமானதல்ல.

4. இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பிரதம முகாமையாளர், (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577 - 8**
**தொலைநகல் இலக்கம் : 2439576**
**இணையத்தளம் : www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**